ஈழ செய்தி ஏடு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4.00

சுடர்: 6 பிரமோதூத ஹூ தை மீ 23 உ செவ்வாய்க்கிழமை (05-02-1991) UTHAYAN - A LIVELY TAMIL NATIONAL DAILY கதிர்: 70

# மக்களை கைது செய்து கொலை செய்யும் குழு!

## வவுனியாப் பகுதியில் நடமாடுகிறது பிரிட்டிஷ் தூதுவரிடம் முறைப்பாடு

யாழ்ப்பாணம், பெப். 5

வவுனியாவில், இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் கண்காணிப்புக் குழு (Vigilant Group) என்ற பெயரில் இனந்தெரியாத குழு ஒன்று கண்ணிற்படும் பொது மக்களைக் காரணமின்றி கைது செய்கிறது. அவ்வாறு கைது செய்யப்படுவோர் பின்னர் கொலை செய்யப்படுகின்றனர்.

இராணுவத்தினரின் ஒரு சாராரே இந்த இனந்தெரியாத குழுவில் அங்கம் வகிக்கின்றனர் என்று அறியப்படுகிறது.

தெற்கில் ஜே வி. பிக்கு எதிரான நடவடிக்கையின் போது செய்யப்பட்டது போன்று, இந்த மனித உரிமை மீறல் சம்பவங்கள் இப்போது வவுனியாவில் நடப்பதாக இலங்கையிலுள்ள பிரிட்டிஷ் தூதுவர் திரு. டேவிட் கிளட்ஸ்ரோனிடம் நேரில் முறையிடப்பட்டுள்ளது.

[2 ஆம் பக்கம் பார்க்க]

### ஹெலி சூடு

சித்தன்கேணி பிள்ளையார் கோவிலுக்கு அண்டிய பகுதியில் நேற்று முற்பகல் 11. 15 மணியளவில் ஹெலி ஒன்று தாக்குதல் நடத்தியது.

[ஓ-15]

### கைதாகினர்

இ. மு. க. அரசு கலைக்கப்பட்டதன் பின்னர் தமிழகத்தில் இதுவரை சுமார் 15 ஆயிரம் பேர் கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டனர் என்று பி. ரி. ஐ. செய்தி ஸ்தாபனம் அறிவித்துள்ளது.

(ஓ-எ)

### மதிய உணவுக்கான

## 7 மாத முத்திரைகளை மாணவர் இழந்தனர்

யாழ்ப்பாணம், பெப். 5

யாழ். மாவட்டப் பாடசாலை மாணவர்கள் கடந்த ஏழு மாதங்களுக்குரிய மதிய உணவு முத்திரைகளை இழந்துவிட்டதாகத் தெரியவந்தது.

யாழ். மாவட்டத்திலுள்ள பாடசாலை மாணவர்களுக்கு கடந்த மே மாதம் 18 ஆம் திகதி தொடக்கம் மதிய உணவுத் திட்டம் நிறுத்தப்பட்டு முத்திரை வழங்கும் திட்டம் அமுலானது.

இந்த முத்திரை வழங்கும் வேலைகள் அரச அதிபரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தன.

கடந்தவாரம் கொழும்பு சென்றிருந்த அரச அதிபரிடம் 1991 ஜனவரி மாதத்திற்குரிய முத்திரைகள் மட்டும் வழங்கப்பட்டன.

அதற்கு முந்திய மாதங்களுக்குரிய முத்திரைகள் முடிவடைந்துவிட்டன என்றும், அங்கு பாடசாலைகள் நடைபெறவில்லை என்றும் காரணம் கூறப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(ஓ-3)

## இலவச பாடநூல் ஒரு தொகுதி வந்தது

யாழ்ப்பாணம், பெப். 5

யாழ். மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கான இலவச பாடநூல்களில் ஒரு தொகுதி நேற்று பருத்தித்துறையிலிருந்து யாழ். இந்து மகளிர் கல்லூரிக்கு எடுத்து வரப்பட்டது.

''லங்காசிறி'' கப்பலில் கொண்டு வரப்பட்ட மேற்படி பாட நூல்கள் ஏழு லொறிகள் மூலம் இங்கு எடுத்து வரப்பட்டன.

பாடநூல்களின் மற்றொரு தொகுதி அடுத்து வரும் கப்பலில் வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(ஓ-5)

## கஷ்ட நிவாரணப் படி; நிதி வழங்க மறுப்பு

உள்ளூராட்சிச் சபை ஊழியர்களுக்குக் கஷ்ட நிவாரணப்படி கொடுக்கத் தேவையான நிதியை வழங்க மாகாண சபை உள்ளூராட்சி திணைக்களம் மறுப்புத் தெரிவித்துள்ளது.

கடந்த ஜூன் மாதம் முதல் டிசம்பர் மாதம் வரை கஷ்ட நிவாரணப்படி வழங்கப்படும் என்று அரசு அறிவித்திருந்தது.

இந்தப் படியை வழங்கத் தேவையான நிதியைத் தருமாறு விடுக்கப்பட்ட கோரிக்கையை ஏற்காத மாகாண சபை, உள்ளூராட்சி சபைகளின் வருமானத்தில் இருந்து வழங்கும்படி உத்தரவிட்டுள்ளது.

இன்றைய கால கட்டத்தில் வரியோ, வேறு எந்தவித வருமானமோ இன்றி உள்ளூராட்சிச் சபைகள் இயங்குவதால், இந்தப்படியை வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(ஓ-3)

## நேசபடை விமானங்கள் இறங்க அரசு அனுமதி?

அமெரிக்கா தலைமையிலான பன்னாட்டுப் போர் விமானங்கள் பொம்மர்கள் கட்டுநாயக்காவில் இறங்கி எரிபொருளை நிரப்பிக்கொண்டு செல்வதற்கு இலங்கை அரசு அனுமதியளிக்கக்கூடிய நிலை ஏற்பட்டிருப்பதாக இந்திய வானொலி நேற்று அறிவித்தது.

போர்க் கப்பல்கள் மற்றும் போர் விமானங்கள் ஆகியவற்றுக்கு எரிபொருள் நிரப்பும் வசதியை அளிப்பது குறித்து ஆறு அமைச்சர்கள் கொண்ட உபகுழு சில விதிமுறைகளைத் தயாரித்து வருகிறது என்றும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டது.

(ஓ-எ)

## சவூதியில் இலங்கையர் நச்சுவாயு முகமூடியுடன்

யாழ்ப்பாணம், பெப். 5

போர் நடந்துவரும் சவூதியில் தங்கியுள்ள இலங்கையர் முகமூடி அணிந்தே வாழ்கின்றனர்.

சுமார் 30 ஆயிரம் ரூபா (8 ஆயிரம் சவூதி ரியால்) பெறுமதியான முகமூடிகளை அவர்கள் நாள் முழுவதும் அணிகின்றனர்.

நச்சுவாயுவில் இருந்து பாதுகாக்கும் இந்த முகமூடிகளை இலங்கையர் பணியாற்றும் நிறுவனங்கள் அவர்களுக்கு வழங்கியுள்ளன.

(ஓ-3)

### சுதந்திர தினத்தன்றும் மக்கள் மீது கொடூரம்;

## உருத்திரபுரத்தில் குண்டு வீச்சு!

## 10 அப்பாவிகள் பலி! 5 பேர் காயம்!!

—உதயன் கிளிநொச்சிச் செய்தியாளர்—

இலங்கையின் சுதந்திர தினமான நேற்றும் ஸ்ரீ லங்கா விமானப்படை பொம்மர்கள் கிளிநொச்சியில் அப்பாவிப் பொதுமக்கள் கூட்டத்தின் மீது கொடூரக் குண்டு வீச்சுத் தாக்குதலை நடத்தின.

நேற்று நண்பகல் ஒரு மணி அளவில் உருத்திரபுரத்தில் கூழாவடிச்சந்தியில் வியாபார நோக்கத்துக்காக நூற்றுக்கணக்கில் கூடியிருந்த பொது மக்கள் மீதே கண்மூடித்தனமான இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது.

மக்கள் நெருக்கமாக இருந்த இடத்தில் — சுமார் ஐம்பது யார் இடைவெளிக்குள் — அடுத்தடுத்து நான்கு குண்டுகளை இரண்டு பொம்மர்கள் வீசின. ஒரு குண்டு வெடிக்கவில்லை.

இந்தக் குண்டு வீச்சினால் 10 பேர் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர்; 5 இற்கும் அதிகமானோர் காயமுற்றனர்; ஒரு லொறி, ஒரு பஸ் உட்பட மூன்று வாகனங்கள் நாசமாகின. மூன்று பலசரக்கு கடைகள், இரண்டு சிற்றுண்டிச் சாலை, ஒரு மின் ஒட்டுத் தொழிற்சாலை, சைக்கிள் திருத்தும் கடை ஒன்று, ஒரு சலூன், தனியார் மருத்துவ நிலையம் ஒன்று ஆகியன சேதமுற்றன. பதினைந்துக்கும் அதிகமான சைக்கிள்களும் சேதமடைந்தன.

(உ-15-76)

## மக்கள் பதுங்கிய பாலத்தை இலக்கு வைத்தே குண்டு வீச்சு!

### உள்ளே சிக்கியே பத்து பேரும் பலியாகினர்

கிளிநொச்சி, பெப். 5

பொம்மரைக் கண்டு பாலம் ஒன்றின்கீழ் பாதுகாப்புத்தேடி தஞ்சம் புகுந்த மக்களை நோக்கியே நேற்று உருத்திரபுரம் கூழாவடிச் சந்தியில் குண்டு வீச்சு நடத்தப்பட்டது.

இதனால் பாலத்திற்குள் தஞ்சம் புகுந்திருந்த பத்துப் பேரும் அந்த இடத்திலேயே மரணமானார்கள்.

மக்கள் கூட்டமாகப் பதுங்கி இருந்த பாலத்தை நோக்கி முதலாவது குண்டு வீசப்பட்டது. அதிஷ்டவசமாக அது வெடிக்கவில்லை.

முதலாவது குண்டு பாலத்தருகே விழுந்ததைக் கண்டதும் அங்கு பதுங்கியிருந்த பொதுமக்களில் அனேகமா

[2 ஆம் பக்கம் பார்க்க]

### முச்சந்தி முரளி



அப்ப அவையின்றை சுதந்திர தினத்தை அப்பாவியளைக் கொன்று [illegible] சொல்லுங்கோ......!

## மட்டு. மாவட்டத்தில் தமிழர் பலர் கொலை

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக இடம்பெற்ற பல்வேறு சம்பவங்களில் பல தமிழர் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கின்றனர்.

40 ஆம் கிராமத்தைச் சேர்ந்த இருவர் பெரியநீலாவணைக் கிராமத்தில் கடந்த 26 ஆம் திகதியும் —

46 ஆம் கிராமத்தைச் சேர்ந்த நால்வர் கடந்த 3 ஆம் திகதி விறகு எடுக்கச் சென்ற போதும் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

கடந்த 29 ஆம் திகதி நண்பகல் மட்டக்களப்பு நகரில் டச் பாரைச் சுற்றி வளைத்த படையினர் கல்லடி உப்பு வெளியைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை மனோகரன் (வயது 20) என்ற இளைஞரைச் சுட்டுக் கொன்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவிலிருந்து வரும் அகதிகளை தங்க வைக்க "அகதிகள் கிராமம்"

## அரசின் முயற்சி குறித்துத் தகவல்

வவுனியா, பெப். 5

தற்போது தமிழ்நாட்டில் தங்கியுள்ள அகதிகள் இலங்கை திரும்பும் விவகாரம் தொடர்பாக அமைச்சர் கல்லாவுடனான பேச்சுக்களின் போது இறுதி முடிவு எட்டப்படாதபோதிலும் அகதிகளை ஏற்று தலைமன்னாரிலும், வவுனியாவிலும் தங்க வைக்கும் ஏற்பாடுகளை இலங்கை அரசு மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வவுனியாவில் 50 ஆயிரம் அகதிகளைத் தங்க வைப்பதற்கு வசதியாக வவுனியா நகரில் இருந்து சுமார் மூன்று மைல் தூரத்தில் உள்ள சமனங்குளம் பகுதியில் "அகதிகள் கிராமம்" ஒன்றை உருவாக்கும் முயற்சியும் மேற்கொள்ளப்பட்டு வருகிறதாம்.

அதேசமயம் தமிழ்நாட்டிலிருந்து வரும் அகதிகளை குடியமர்த்துவதற்குத் தேவையான பூர்வாங்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மன்னாரில் உள்ள படை அதிகாரிகளுக்கும் சிவில் உயர் அதிகாரிகளுக்கும் உத்தரவிடப்பட்டுள்ளது.

அகதிகளைக் குடியமர்த்துவதற்குத் தேவையான நிதி உதவிகள் பிரிட்டிஷ் அரசாங்கத்திடமிருந்து கிடைக்கவுள்ளன என்றும் வவுனியாவுக்கு விஜயம் செய்த பிரிட்டிஷ் உயர் ஸ்தானிகர் சமனங்குளம் பகுதியை பாதுகாப்புத்துறை அதிகாரிகளுடன் நேரில் சென்று பார்வையிட்டார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. [தி-164]

# ஜே. வி. பி. தீவிரவாதிகள் அறுவர் சுட்டுக் கொலை

கொழும்பு, பெப் 5

குருநாகல் மாவட்டத்தில் திக்வெரட்டியாவில் ஜே.வி.பி. தீவிரவாதிகள் என்று சந்தேகிக்கப்படும் ஆறு பேர் பாதுகாப்புப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

தீவிரவாத முகாம் ஒன்றை பாதுகாப்புப் படையினர் முற்றுகையிட்டபோது இது இடம்பெற்றது.

ஆயுதங்களும் வெடிமருந்துகளும் கைப்பற்றப்பட்டன என்றும் அறிவிக்கப்பட்டது. (ஒ-எ)

# முதலாம் தவணை நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம், பெப். 5

யாழ். மாவட்ட பாடசாலைகளின் 1991 ஆம் ஆண்டின் முதலாம் தவணை நாளை ஆரம்பிப்பதாக யாழ். கல்வி அலுவலகம் அறிவித்துள்ளது.

புதிய கல்வி ஆண்டின் ஆரம்ப ஏற்பாடுகள் குறித்து யாழ். மாவட்டத்தில் சகல கோட்டக் கல்வி அதிகாரிகள் மற்றும் கொத்தணி அதிபர்களுக்கு கல்விப்பணிப்பாளர் சுற்று நிருபம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

அதில் இலவச பாடநூல் விநியோகத்திற்கு முன்னுரிமை கொடுத்து, இம்மாதம் இறுதிக்குள் அதனைப் பூர்த்தி செய்யுமாறும் அவர் கேட்டுள்ளார். (ஒ-5)

## கலைப்பை எதிர்த்து

# தமிழகத்தில் நாளை ஹர்த்தால் நடக்கும்

சென்னை, பெப். 5

தி.மு.க. அரசு கலைக்கப்பட்டதை எதிர்த்து தேசிய முன்னணி நாளை நடத்தும் ஒருநாள் ஹர்த்தால் குறித்து தமிழகத்தில் மாநில ஆளுநர் தீவிர பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார்.

இன்று செவ்வாய் இரவு 8 மணிமுதல் நாளை மறுநாள் வியாழன் காலை 6 மணிவரை அரச பஸ்கள் ஓடா என்று மாநில அரசு அறிவித்துள்ளது.

ஹர்த்தாலுக்கு ஆதரவளிக்க வேண்டாம் என்று இந்திரா காங்கிரஸ் - அ. தி. மு. க. கூட்டணியும் —

ஹர்த்தாலை வெற்றிபெறச் செய்து மத்திய அரசின் ஜனநாயக விரோத நடவடிக்கைகளுக்குக் கண்டனம் தெரிவிக்கும்படி தேசிய முன்னணியில் அங்கம் வகிக்கும் தி. மு. க. உட்பட அனைத்துக் கட்சிகளும் மக்களைக் கோரியுள்ளன. (ஒ-எ)

# மரண அறிவித்தல்கள்

## இ. பாலேந்திரன்

இணுவில் கிழக்கு சிவகாமி அம்மன் கோவிலடியைச் சேர்ந்த இ. பாலேந்திரன் அவர்கள் ஜேர்மனியில் காலமாகிவிட்டார்.

இவர் ஓய்வுபெற்ற புகையிரத நிலைய அதிபர் க. இராசரத்தினம், ஞானப்பூங்கோதை அவர்களின் அன்பு மகனும், குணேந்திரன் (சுன்னாகம் ப.நோ.கூ. சங்கம்), திருமதி இ. நந்தினி (ஜேர்மனி), திருமதி ச. சுகந்தினி (யாழ். பல்கலைக்கழகம் Instructor), ஜெயந்தினி, சாந்தினி ஆகியோரின் அன்புச் சகோதரனும், இரவீந்திரன் (ஜேர்மனி), சந்திரா (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும், கார்த்திகா (ஜேர்மனி)வின் அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 5-2-91 இன்று ஜேர்மனியில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர்களுக்கு அறியத்தருகிறோம்.

தகவல்:

சிவகாமி அம்மன் கோவிலடி, இணுவில் கிழக்கு, இணுவில்.

மு. சிவலிங்கம் (முகாமையாளர்)

(15418)

## தம்பு முத்தையா

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும், உரும்பராய் கிழக்கு வாசியுமான தம்பு முத்தையா 4-2-1991 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தெய்வானைப்பிள்ளையின் கணவரும், துரைராசா (லண்டன்), சுந்தரலிங்கம், சிவலோகேஸ்வரி, மகாதேவன் (ஆசிரியர், கிளிநொச்சி), சிவமலர், இராஜலக்சுமி ஆகியோரது அன்புத் தந்தையாரும், துரைராஜா (மாப்பாணர் கூட்டுத்தாபனம், யாழ்ப்பாணம்), பரமேஸ்வரன் - வர்த்தகர், இராஜகோபால் (ஸ்ரீதேவி ட்ரான்ஸ்போர்ட், ஆவரங்கால்), கௌரி, சரஸ்வதி, ஜெகசோதி ஆகியோரது அன்பு மாமனாரும், தஷித்தா, துஷாரா, தஷிலா, சிரதன் (ஜேர்மனி), மயூரதன், ஹரிதரன், கோணேஸ்வரன், ஆரணி, சந்திரிகா, சுதன், கஜன், சிவகுமார், பமிலா, வரதன், சுஜீபன், தனுஷா, தரிஷன், நஜீபன், சகிலா ஆகியோரது அன்புப் பேரனுமாவார்.

ஈமக்கிரியைகள் இன்று செவ்வாய் காலை 10-00 மணியளவில் உரும்பராய் கிழக்கிலுள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் இளங்காடு மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

உரும்பராய் கிழக்கு, உரும்பராய். (15419)

மா. துரைராஜா (மருகர்)

## சிவஸ்ரீ இ. சிவசுவாமிக் குருக்கள்

அல்வாய் வடக்கு ஆதி வீரபத்திர கோவில் பூசகர் சிவஸ்ரீ இ. சிவசுவாமிக் குருக்கள் சிவபதமடைந்தார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1-00 மணியளவில் நடைபெறும்.

வீரபத்திர சுவாமி கோவில், அல்வாய்.

தகவல்:

சி. வாசுதேவக் குருக்கள் (அன்னாரது மகன்)

(15420)

## தையிட்டி வாசி மரணம்

யாழ்ப்பாணம், பெப். 5

கடந்த அக்டோபர் மாதம் 17 ஆம் திகதி பலாலி ஷெல் வீச்சுக்கு இலக்காகி காயமடைந்த தையிட்டி வாசியான மரியாம்பிள்ளை தம்பிராசா (38 வயது) என்பவர் நேற்று யாழ். ஆஸ்பத்திரியில் மரணமானார். (ஒ-15)

## வீரமரணம்

யாழ்ப்பாணம், பெப். 5

நேற்று முன்தினம் மாலை மாவிட்டபுரம் முகாமிலிருந்து வெளியேறிய ராணுவத்துடன் இடம்பெற்ற மோதலில் சுஜன் (செயமாலை ஜக்ஸன் - பயாவிளான்) என்ற போராளி வீரமரணமடைந்தார்.

★ ★

கடந்த சனியன்று ஆனையிறவு முகாம் பகுதியில் இராணுவத்துடன் நடந்த மோதல் சம்பவம் ஒன்றில் பிரகாஷ் (குணநாயகம் சேதீஸ்வரன் - வண்ணேரிக்குளம் கிளிநொச்சி) என்ற போராளி வீரமரணம் அடைந்தார். (உ)

## மரண தண்டனை

யாழ்ப்பாணம், பெப். 5

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் உறுப்பினராக இருந்து கொண்டு பண மோசடி மற்றும் முறைகேடான பாலியல் உறவு போன்றவற்றில் ஈடுபட்டமைக்காகவே உருத்திரபுரத்தில் வைத்து செல்வா என்பவருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது.

இது தொடர்பாக நேற்று வெளியான செய்தியில் "முறைகேடான" என்ற சொல் தவற விடப்பட்டிருந்தது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (உ)

## மக்களை...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிரிட்டிஷ் தூதுவர் கடந்த வார இறுதியில் வவுனியாவுக்கு விஜயம் செய்திருந்தார். அப்போது அவரை வவுனியா பிரஜைகள் குழு சந்தித்து மேற்கண்ட அட்டூழியம் குறித்து எடுத்துரைத்தது.

திரு. சேவியர் செல்வபாலா தலைமையில் பிரஜைகள் குழுவின் பிரதிநிதிகள் பிரிட்டிஷ் தூதுவரைச் சந்தித்த போது, வவுனியா மேலதிக அரசாங்க அதிபரும், சிவில் நிர்வாக இணைப்பதிகாரியுமான கேணல் சீ. ஏ. டி. இரத்நாயக்காவும், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் திரு. பி. ஆயுபாலவும் கூட இருந்தனர்.

இனந்தெரியாத குழுவினால் கைது செய்து கொண்டு செல்லப்படுவோரின் 75 வீதமானோர் உயிருடன் இருப்பதாகத் தெரியவில்லை. இவ்வாறான கைதுகள் பற்றி இராணுவ உயரதிகாரிகளுக்கோ, சிவில் அதிகாரிகளுக்கோ அறிவிக்கப்படுவதும் இல்லை — என்று தூதுவரிடம் எடுத்துரைக்கப்பட்டது.

எனவே, பிரிட்டிஷ் தூதுவர் தமது அரசாங்கத்துடன் தொடர்புகொண்டு இவ்வாறான மனித உரிமை மீறல் நடவடிக்கைகள் இங்கு நடைபெறுவதை தடுத்து நிறுத்த வேண்டும் — என்று பிரஜைகள் குழுவினர் கேட்டுக் கொண்டனர். (அ)

# சிறு தானியங்களை பயிரிடுமாறு கோரிக்கை

தற்போதைய உணவுக் கட்டுப்பாட்டைக் கருத்திற்கொண்டு இம்முறை பெரும்போக வேளாண்மை முடிவடைந்ததும் தத்தமது காணிகளில் சிறுதானியங்களைப் பயிரிடுமாறு விவசாயிகளை விவசாயப் பகுதியினர் கேட்டுள்ளனர்.

இதன்படி பயறு, எள்ளு, கௌபி போன்ற பயிர்களைச் சாகுபடி செய்வதற்கு கமத்தொழில் சேவைத் திணைக்களமும், கமநல சேவைத் திணைக்களமும் இணைந்து நடவடிக்கை எடுத்து வருகின்றன.

விவசாயிகள் தமக்குத் தேவையான விதை தானியங்களைத் தத்தமது பகுதி கமநல சேவை நிலையங்களுடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (உ)

## தொகுதி உடன்பாடு குறித்து

# ராஜீவ், சந்திரசேகருடன் ஜெயலலிதா பேசுவார்

சென்னை, பெப். 5

அ. தி. மு. க. பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதா நேற்றுப் புதுடில்லிக்குப் போய்ச் சேர்ந்தார்.

பிரதமர் சந்திரசேகர் மற்றும் இந்திரா காங்கிரஸ் தலைவரும் முன்னாள் பிரதமருமான ராஜீவ்காந்தியையும் அங்கு அவர் சந்திப்பார்.

தமிழ்நாடு சட்டசபைக்கான பொதுத்தேர்தலை எவ்வளவு விரைவாக நடத்தலாம் என்பது குறித்து அப்போது ஜெயலலிதா ஆலோசனை நடத்துவார் என்று சென்னைச் செய்திகள் தெரிவித்தன.

இதேவேளை - புதுடில்லியில் செல்வி ஜெயலலிதாவை மத்திய அமைச்சர் டாக்டர் சுப்பிரமணிய சுவாமி சந்தித்து பேச்சுக்கள் நடத்தினார்.

சட்டசபைத் தேர்தல் சம்பந்தமான தொகுதி உடன்பாடு குறித்தும் ஜெயலலிதா ராஜீவ்காந்தியுடன் பேசுவார் என்று தெரியவருகிறது. (ஒ-எ)

# சவூதியில் அமெ. படைகள் மீது கெரில்லாக்கள் பாய்ச்சல்

சவூதி அரேபியாவின் துறைமுக நகரான ஜெத்தாவில் அமெரிக்க படையினர் பயணம் செய்த வாகனம் ஒன்றின் மீது கெரில்லாக்கள் நடத்திய தாக்குதலில் அமெரிக்கப் படையினர் இருவரும் சவூதி வீரர் ஒருவரும் காயமடைந்தனர் என்று அறிவிக்கப்பட்டது.

# போர்க் கப்பல் பீரங்கி தாக்கு

அமெரிக்கப் போர்க் கப்பல் 'மிசூரி' குவைத்தில் உள்ள ஈராக்கிய நிலைகளை நோக்கி நேற்று முதல் பலத்த பீரங்கித் தாக்குதல்களை மேற்கொண்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

'மிசூரி' கப்பலில் உள்ள 16 அங்குலப் பீரங்கிகள் 1.2 தொன் குண்டுகளால் 38 கிலோ மீற்றர் தூரம் சென்று தாக்கக் கூடிய வல்லமை படைத்தவை என்று அறிவிக்கப்படுகிறது.

## மக்கள் பதுங்கிய....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

னோர் பயத்தினால் எழுந்து, வேறு பாதுகாப்பான இடங்களைத் தேடிக் கலைந்து ஓடினர்.

அவ்வேளை இரண்டாவது குண்டு பாலத்தின் மீது விழுந்து வெடித்தது. அதனால் பாலத்திற்குக் கீழ் ஏற்கெனவே இருந்த பத்துப் பேரும் அந்த இடத்திலேயே பலியானார்கள்.

மூன்றாவது குண்டும், நான்காவது குண்டும் சந்தையில் நின்ற ஆலமரத்தை நோக்கி வீசப்பட்டன. இதனால் அப்பகுதியிலிருந்த ஐந்துக்கு மேற்பட்ட பொதுமக்கள் காயமடைந்தனர். ஏழுக்கு மேற்பட்ட வர்த்தக நிறுவனங்கள் சேதமுற்றன.

இச் சம்பவத்தில் உயிரிழந்தோர் விபரம் வருமாறு:-

1. பஞ்சலிங்கம் பாலேந்திரா (ஈழநாடு) பத்திரிகை முகவர் — வயது 23, உருத்திரபுரம்.

2. கோபாலசிங்கம் குகன் — வயது 18 உருத்திரபுரம்.

3. பத்மேச தரியலிங்கம்— வயது 38, சிவநகர்.

4. சுந்தரம் சந்திரன்— வயது 13 சிவநகர்.

5. கணபதிப்பிள்ளை ஜெயலிங்கம் — வயது 9, உருத்திரபுரம்.

6. பாலசுந்தரம் ஜெகம்— வயது 12, உருத்திரபுரம்.

7. நாகலிங்கம் தயாளன்— வயது 13, உருத்திரபுரம்.

8. கிருஷ்ணசாமி — வயது 65, புத்தூர்.

9. கருணா — வயது 25, அளவெட்டி.

10 மற்றும் ஒருவர். பெயர், விபரம் தெரியவில்லை.

இச்சம்பவத்தில் உயிரிழந்த கணபதிப்பிள்ளை ஜெயலிங்கத்தின் சகோதரர் கோணேஸ்வரலிங்கம் (வயது 16) காயமுற்ற நிலையில் கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

படுகாயமடைந்த கணேசலிங்கம் தவநேசன் (வயது 18 - உருத்திரபுரம்), சந்தனம் இராசேந்திரம் (வயது 23 - கண்டி) ஆகிய இருவரும் யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்து வரப்பட்டுள்ளனர். (உ-76)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## தமிழருக்கு நிவாரணம்

இராணுவ முகாம்கள் உள்ள பகுதிகளில் இருந்து வெளியேறி, இடம் பெயர்ந்தவர்களுக்கு மேலதிக நிவாரணம் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை எழுந்துள்ளது.

குறிப்பாக பலாலி, காங்கேசன்துறை, மயிலிட்டிப் பகுதிகளில் இருந்தும் ஊர்காவற்றுறை, காரைநகர் ஆகிய பகுதிகளில் இருந்தும் இடம் பெயர்ந்தவர்களுக்கு மேலதிக நிவாரணம் வழங்க வேண்டும் என்று சம்பந்தப்பட்டவர்கள் கேட்கிறார்கள்.

வடக்கு-கிழக்குப் பிரதேசமெங்கும், தமிழர்கள் வாழும் பகுதிகள் எங்கும், கடந்த எட்டு மாதங்களாக இராணுவத் தாக்குதல்கள் நடைபெற்று வருகின்றன. அவற்றால் தமிழர் தாயகம் முழுவதிலும் பரந்து வாழும் ஒவ்வொரு தமிழனும் ஏதோ ஒரு விதத்தில் பாதிக்கப்பட்டுள்ளான்; பாதிக்கப்படுகிறான். உறவினர் இழப்பு, உடைமை இழப்பு, வாழ்க்கை சீர்குலைவு, தாக்குதலுக்கு உள்ளாகிக் காயமுறுதல் என்று ஏதோ ஒரு பாதிப்பால் ஒவ்வொருவரும் அல்லற்படுகிறார்கள், அவலமுறுகிறார்கள். பாதிப்புகள், தாக்கங்கள் பொதுவாக எல்லாத் தமிழர்களுக்குமே உண்டு.

எனினும் கிழக்கு வாழ் தமிழ் மக்களின் அவலங்கள், துன்பங்கள், கஷ்டங்கள் கனமானவை. எழுத்தால் அளக்க முடியாதவை. வடபகுதித் தமிழர்களுக்கு நிவாரணமாவது கிடைக்கிறது. ஒதுங்கி இருக்க உறவினரின் வீடோ அகதி முகாமோ உண்டு நிவாரணமும் பெற முடிகிறது. கிழக்குத் தமிழ் மக்களோ சொந்த வீடுகளிலும் இருக்க முடியாது; உறவினர் வீடும் இல்லை; அகதி முகாம்களிலும் தங்க முடியாது காடுகளில் தஞ்சமடைந்து உணவின்றி உயிர்மாள வேண்டியுள்ளது.

வடக்கில் ஏனைய பகுதி மக்களை விட இராணுவ முகாம்களை அண்டி வாழ்ந்தவர்கள் பலவகைகளாலும் பாதிக்கப்பட்டவர்கள். அதில் இரண்டு கருத்துகள் இருக்க முடியாது. அவர்கள் தங்களுக்கு ஏனையவர்களை விட மேலதிக நிவாரணம் கோருவது நியாயமானதே.

ஆனால் எட்டு மாதங்கள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மூன்றரை மாதங்களுக்கு (14 வாரங்களுக்கு) மட்டுமே தமிழ்ப் பகுதிகளில நிவாரணம் வழங்க இதுவரை அரசாங்கம் முடிவு செய்துள்ளது. (இதுவரை 8 வாரங்களுக்குரிய நிவாரணம் வழங்கப்பட்டிருக்கிறது)

எனவே அரசு பொதுவான நிவாரணம் அல்லது விசேஷ (மேலதிக) நிவாரணம் எதையும் வழங்குமா என்பது கேள்விக் குறியே. தமிழர்களைச் சொந்த நாட்டு மக்களாகக் கருதினால் அது அவர்கள் மீது குண்டு வீச்சு நடத்துமா? எனவே அரசு தமிழர்களுக்கு நிவாரணம் வழங்கும் என்று எதிர்பார்க்க இடமில்லை.

அரசு தான் செய்யும் பாவத்தைப் போக்குவதற்கான ஒரு தர்ம காரியமாகவேனும் தமிழருக்கு நிவாரணம் வழங்குமா என்பது சந்தேகமே.

இதனை எடுத்துக் கூறி, சர்வதேச தொண்டர் ஸ்தாபனங்களிடம் இருந்து நிவாரணம் கேட்க வேண்டும். அதனைப் பெறக்கூடிய விதத்தில் தமிழர் நிலையை அவற்றுக்கு விளங்கப்படுத்தவேண்டும். இதற்கென விசேட முயற்சிகள் மேற்கொள்ளப்படுவது அவசியம்.

# 89-90 க்கு திட்டமிட்ட வேலைகளை இந்த வருடம் பூர்த்தி செய்ய அனுமதி

யாழ்ப்பாணம், பெப். 5

யாழ் மாவட்டத்தில் 89 ஆம் 90 ஆம் ஆண்டுகளுக்குத் திட்டமிடப்பட்ட அபிவிருத்தி வேலைகளை இவ்வருடம் மேற்கொள்ள அரசு அனுமதி வழங்கியுள்ளது.

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட நிதியில் இருந்து கடந்த இருவருடங்களும் மேற்கொள்ளப்படாது தடைப்பட்ட வேலைகளை இந்த வருடம் தொடர அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேற்கண்டவாறு யாழ். அரச அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் தெரிவித்தார்.

இந்த தொடர் வேலைகளை மேற்கொள்வதற்கான நிதி செயலகத்துக்கு விரைவில் வந்து சேரவுள்ளதாக அவர் தெரிவித்தார். (இ-3)

## ப. நோ. கூ. சங்கங்களுக்கு ஏற்பட்ட சேத விவரங்கள்

யாழ்ப்பாணம், பெப். 5

யாழ். மாவட்டத்தில் உள்ள ப. நோ. கூ. சங்கங்களுக்கு இராணுவ நடவடிக்கைகளால் ஏற்பட்ட சேதங்கள் பற்றிய விவரங்கள், வடக்கு - கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரிடம் கையளிக்கப்பட்டன.

சமீபத்தில் திருகோணமலை சென்றிருந்த யாழ் மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. செ. லிங்கநாதன் இவற்றை நேரடியாகக் கையளித்தார்.

## 200 மீனவர் குடும்பங்கள் சுழிபுரம் பகுதியில் பாதிப்பு

யாழ்ப்பாணம், பெப். 5

இராணுவ நடவடிக்கைகளினால் சுழிபுரம் கிராமிய அமைப்பில் உள்ள சுமார் 200 மீனவக்குடும்பங்கள் தொழில் இழந்து பாதிக்கப்பட்டுள்ளன.

கடந்த ஜூன் நடுப்பகுதியில் இராணுவ நடவடிக்கைகள் ஆரம்பித்ததைத் தொடர்ந்து இப்பகுதி மீனவர்கள் தமது தொழிலைச் செய்வதில் பெரும் இடையூறுகளை அனுபவித்து வருகின்றனர் என்று சுழிபுரம்கிராமிய கடற்தொழிலாளர் சமூக அபிவிருத்தி அமைப்பு தெரிவித்துள்ளது. (இ 5)

## ஹெலி சூடு; சிறுவன் காயம்

யாழ்ப்பாணம், பெப். 5

புத்தூர், வாதரவத்தைப் பகுதியில் சனி மாலை ஹெலி நடத்திய தாக்குதலில் 11 வயதுச் சிறுவனான ரி. பாரதிதாசன் காயமுற்றார்.

காயமுற்ற சிறுவன் யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளான். (இ-15)

## வாரவிழா

பருத்தித்துறை, பெப். 5

வடமராட்சி கருக்கெழுத்துக்கழகம் நடத்தும் கருக்கெழுத்து மேதை பிற்மன் வார விழாவும், தட்டைச்சுத் தந்தைகள் ஷோல்ஸ் - முந்தையா வாரவிழாவும் எதிர்வரும் 17ஆம் திகதி மாலை 2. 00 மணிக்கு கழகத் தலைவர் திரு சி. குலசிங்கம் தலைமையில் உடுப்பிட்டி கழகப் பயிற்சி நிலையத்தில் நடைபெறும். (இ - 118)

## தர்மப்பணம்

கொழும்புத்துறை, பெப். 5

யாழ். உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு உட்பட்டதபால் அலுவலகங்களில் கடந்த வருடத்துக்கான ஆகஸ்ட், செப்டம்பர், அக்டோபர் மாதங்களுக்குரிய மாதாந்த உதவிப் பணம் (தர்மப்பணம்) வழங்கப்பட்டு வருகிறது.

இப்பணத்தைப் பெற்றுக்கொள்ளாதவர்கள் தத்தமது பகுதியில் உள்ள தபாற்தோரில் எதிர்வரும் 16 ஆம் திகதி சனிக்கிழமைக்கு முன்னர் நேரில் சென்று பெற்றுக் கொள்ளும்படி தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-30)

## தமிழ் இளைஞர்கள் கொழும்பில் படாதபாடு

கொழும்பு நகரில் தமிழ் இளைஞர்கள் படாதபாடு படுகிறார்கள். பொலிஸாரினால் திடீர் திடீரென தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்படுகிறார்கள்.

கைதானவர்களிடம் இருந்து பணம் பெற்றுக் கொண்டு பொலிஸார் அவர்களை பின்னர் விடுவிக்கின்றனர். இப்படியான சம்பவங்கள் நகரில் தொடர்ந்து நடந்து வருகின்றன.

விடுதிகளில் தங்கி இருக்கும் இளைஞர்களே பெரும்பாலும் கைது செய்யப்படுகின்றார்கள். இதுபோல் பஸ் நிலையம், ரயில் நிலையம், வீதிகள் போன்ற பொது இடங்களிலும் இளைஞர்கள் கைது செய்யப்படுகின்றார்கள். (இ-76)

## நடிகர் தெரிவு

யாழ்ப்பாணம் நடக அரங்கக்கல்லூரி எதிர்வரும் மார்ச் மாதம் நடுப்பகுதியில் நாடகம் ஒன்றினை மேடையேற்ற உள்ளது.

அந்த நாடகத்தில், நாடக அரங்கக்கல்லூரி நடிகர்களுடன், திறமை உள்ள வெளி நடிகர்களையும் சேர்த்துக் கொள்ள ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

புதிய நடிகர்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை நாளை பிற்பகல் மூன்று மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் நடைபெறும் என்று நா. அ. கல்லூரி வட்டாரங்கள் தெரிவித்தன. (அ)

## இலங்கை வங்கி மாங்குளம் கிளை

யாழ்ப்பாணம், பெப் 5

இலங்கை வங்கியின் மாங்குளம் கிளை தனது வாடிக்கையாளருக்கான சேவையை கிளிநொச்சிக் கிளையில் வைத்து நாளை 6ஆம் திகதி ஆரம்பிக்கிறது.

இதன் அலுவலக நேரம் காலை 9 மணி முதல் 10 மணி வரை என இலங்கை வங்கி வன்னிப் பிராந்திய முகாமையாளர் அறிவித்துள்ளார். (இ)

## வல்லிபுர ஆழ்வார் உற்சவம்

பருத்தித்துறை, பெப். 5

புகழ்பெற்ற பிரசித்திபெற்ற ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய வருடாந்த உற்சவம் இம் மாதம் 13 ஆம் திகதி புதன் கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

இரதோற்சவம் 27 ஆம் திகதியும், சமுத்திர உற்சவம் 28 ஆம் திகதியும் நடைபெறும். (இ-118)

# வளைகுடா செய்திகள்

## உணவு விநியோகப் பாதை குண்டு வீச்சினால் நாசம்

குவைத்தில் நிலை கொண்டுள்ள ஈராக்கிய இராணுவத்தினருக்கு உணவுப் பொருள்களை எடுத்துச் செல்ல பயன்படுத்தப்படும் ரயில் பாதைகள், பாலங்கள் மற்றும் வீதிகள் பன்னாட்டுப் போர் விமானங்களின் கடும் தாக்குதலினால் அழிந்து போய்விட்டன என்றும்— இதன் காரணமாக ஈராக் படையினருக்கு உணவு தட்டுப்பாடு ஏற்படக்கூடிய ஆபத்து உருவாகியிருப்பதாகவும் அமெரிக்க தரப்புச் செய்திகள் தெரிவித்தன.

★ இஸ்ரவேல் மீது ஈராக் செலுத்திய ஸ்கட் ஏவுகணை ஒன்று, ஜோர்தான் நாட்டில் விழுந்து வெடித்தது என்ற தகவலை ஜோர்தான் அரசு மறுத்துவிட்டது.

★ சவூதி அரேபியாவில் அமெரிக்க 'கொப்றா' ரக ஹெலிக்கொப்டர் ஒன்று விபத்துக்குள்ளாகியதில், அதில் இருந்த நான்கு அமெரிக்க விமானிகள் கொல்லப்பட்டனர்; மூன்று தினங்களுக்குள் இடம்பெற்ற இரண்டாவது அமெரிக்க ஹெலிக்கொப்டர் விபத்து இதுவாகும். முதல் நடந்த விபத்தில் 2 அமெரிக்க விமானிகள் கொல்லப்பட்டனர்.

## பொம்மர் விழ்ந்து நொருங்கியது

போர் முனையல் இடம்பெற்ற சம்பவத்தில் தொழில் நுட்பக் கோளாறு காரணமாக அமெரிக்காவின் பி 52 ரக பொம்மர் விமானம் ஒன்று சவூதியில் நொருங்கி வீழ்ந்தது; அதில் இருந்த 11 விமானிகளில் ஏழு பேர் கொல்லப்பட்டனர். நான்கு பேரைக் காணவில்லை என்று பன்னாட்டுப் படைத் தரப்புச் செய்திகள் தெரிவித்தன

★ பன்னாட்டுப் படையினர் தரை யுத்தத்தை ஆரம்பிக்கும் போது, ஈராக் படைகளால் இரசாயன ஆயுதங்களைப் பாவிக்கும் ஆபத்து 50 சத வீதம் இருப்பதாக பிரிட்டிஷ் படை அதிகாரி ஒருவர் சொன்னார்.

## தவறுதலான தாக்குதலால் அமெரிக்க விமானிகள் பலி

போர் முனையில் அமெரிக்கப் போர் விமானங்கள் செலுத்திய ஏவுகணை ஒன்று தவறுதலாக பன்னாட்டுப் படையினரைத் தாக்கியதில் ஏழு அமெரிக்க விமானிகள் கொல்லப்பட்டனர் என்று அறிவிக்கப்படுகிறது.

★ வளைகுடாப் போர் முடிந்த பின்னர், வளைகுடா நாடுகளுக்கு பாதுகாப்பு வழங்கும் புதிய திட்டம் ஒன்றை பிரிட்டன் தயாரித்து உள்ளது.

★ வளைகுடாப் போரில் குறுகிய தூர அணு ஆயுதங்களைப் பாவிக்கும் திட்டம் ஏதும் உள்ளதா? என்பது பற்றி இந்தக் கட்டத்தில் கூறமுடியாது என்று அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் டிக் சேனி தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தேவை

ஆங்கில மருந்து வியாபாரத்தில் அனுபவமுள்ள பெண் விற்பனையாளர் தேவை தகுந்த நற்சான்றிதழ் பத்திரங்களுடன் 6-2-91 காலை 9 மணிக்கு நேரில் சமுகமளிக்கவும் வெண்கோ, 250 (470) ஆஸ்பத்திரி வீதி, O. P. D முன்பாக யாழ்ப்பாணம். (15762)

## வாங்கலாம் விற்கலாம்

பழைய புத்தகங்கள், கொப்பிப் பேப்பர், சிமெந்து கோழித்தீன் உறை, பித்தளைச் செப்பு, போத்தல் வகைகள் வாங்கப்படும், விபரங்களுக்கு சேனாதிராசா Second Hand Book House, 57 ஸ்ரான்லி வீதி இலங்கை வங்கிக்கு முன்னேன், யாழ்ப்பாணம். (15711)

## நாற்றுக் கன்றுகள்

எம்மிடம் சிறந்த இன விதை எலுமிச்சை ஒட்டுத் தோடை நாற்றுக்கன்றுகள் விற்பனைக்கு உண்டு. ஐம்பது நாற்றுக்களுக்குமேல் தொகையாக எடுப்பவர்களுக்கு கழிவு உண்டு. சைவ வித்தியா விருத்திச் சங்கம் கல சாலை வீதி, திருநெல்வேலி. (C/5720)

## விற்பனை

மில்க்வைற் திரவ சவர்க்காரம் Liquid Soap அனைத்து விழுக்கு அகற்றி வீட்டுச் சலவைக்குச் சிறந்தது. முழுப் போத்தல் ரூ 90/- அரைப் போத்தல் ரூ. 45/- 10க்கு மேல் விசேட கழிவு இணுவில், திருநெல்வேலி, யாழ். நவீன சந்தை அண்ணா கோப்பிக்கடைகளிலும் விற்பனையாகிறது. மில்க்வைற். (சி/5721)

## பரதநாட்டிய வகுப்பு

பரதநாட்டியம் பயில விரும்பும் மாணவிகள் சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 9.00 மணிமுதல் 11.30 வரை தொடர்பு கொள்ளுங்கள் 230, நாவலர் வீதி, (இலுப்பையடி சந்திக்கு அருகாமை) யாழ்ப்பாணம். (சி/5712)

## தரன் ஸ்ருடியோ

றபர் சீல், கலர் - கறுப்பு-வெள்ளை பாஸ்போர்ட், அடையாள அட்டை, 12''X10'' படங்கள், பிளாஸ்ரிக் விளம்பர போட் மற்றும் ஓவிய வேலைகளுக்கு 24, யாழ். வீதி ரெட்னா வீதி, யாழ்ப்பாணம். (15710)

---

தூய / பிரயோக } கணிதம்

A/L 90 ஆரம்பம்
புதன் மாலை 3 30

A/L 91 ஆரம்பம்
சனி காலை 8-00

A/L 92 ஆரம்பம்
சனி மாலை 2 30

ஆசிரியர்
**திரு. ரவிமோகன்**
32, பிரப்பன்குளம் வீதி, யாழ்ப்பாணம்.
(மனோகரா சந்திக்கும் யாழ் இந்துக்கல்லூரிக்கும் இடையில்)
(15758)

---

# திருப்பிக் கேட்கிறார்

தாய்லாந்து தலைநகர் பாங்கொக்கில் உள்ள பளிங்கு மண்டபத்தில் வைக்கப்பட்டுள்ள வல்லிபுரம் புத்தர் சிலையை திருப்பித் தரும்படி ஜனாதிபதி பிரேமதாஸா தாய்லாந்து மன்னரைக் கோரியிருக்கிறார்.

1906 ஆம் ஆண்டில் இந்த புத்தர் சிலை தாய்லாந்துக்கு அன்பளிப்புச் செய்யப்பட்டது.

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



திருமதி
**தெய்வானை சபாபதிப்பிள்ளை**

மலர்வு: 20 - 02 - 1920 உதிர்வு: 06 - 01 - 1991

அன்னையே! தினமும் நாம் உமது திருவடி பணிந்து தங்கள் நினைவாலும், ஒளியாலும் உள்ளம் உருகுகின்றோம்.

அன்னையின் ஆத்மசாந்திக்காக என்றென்றும் பிரார்த்திக்கும்:

வளமாரி, கட்டுவன், தெல்லிப்பழை. பிள்ளைகள். (15759)

---

# தாபரிப்பு நிதி

கொழும்புத்துறை, பெப். 5

யாழ். மாநகரசபை சன சமூக நிலையங்களின் சமாசத்தினால் வன்செயல்களின் போது தந்தையை இழந்த பிள்ளைகளுக்கான தாபரிப்பு நிதி எதிர்வரும் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் மூன்று மணிக்கு வழங்கப்படும்.

சமாசத் தலைவர் திரு. கோ. தியாகராசா தலைமையில் வைபவம் நடைபெறும். (இ 30)

---

**PURE - APPLIED**

திரு. கலைநேசன்
B. Sc. (Cey)

**90 A/L**

வகையீட்டுச் சமன்பாடுகள்

ஆரம்பம்: 05 - 02 - 91
காலை 11: 00

**Personal Classes**

B.M.C. முன்லேன்-யாழ். (15757)

---

**The VTC**
வேலணை

மீண்டும் ... **ஆண்டுகள் 6, 7, 8, 9, 10, 11**

ஆரம்பம்: **6 - 2 - 91** மாலை 3-30

கணிதம் / விஞ்ஞானம் } **கதிர்**

ஏனைய பாடங்களும் நடைபெறும். (15706)

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டிக்கிரியையும்



தாயின் மடியில்: 01 - 08 - 1934

இறைவனடியில்: 07 - 01 - 1991

**அமரர் திருவாளர் சின்னத்தம்பி சிவபாதம்**
(சிமெந்துக் கூட்டுத்தாபனம், காங்கேசன்துறை)

உங்கள் அன்பான புன்சிரிப்பாலும், பண்பான பேச்சாலும், பணிவான நடத்தையாலும் காலமெல்லாம் எங்களுக்கு வழிகாட்டியாக இருப்பீர்கள் என்று நினைத்தோம். ஆனால் காலன் உங்களைக் கவர்ந்து விட்டாலும், நீங்கள் விட்டுச் சென்ற அன்பு எங்களை விட்டு ஒரு போதும் நீங்காது. உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனை வேண்டுகின்றோம்.

எமது குடும்பத்தலைவரின் மரணச்சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும், அன்று எமக்கு பல விதத்திலும் உதவிகள் செய்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

உங்கள் பிரிவால் வாடும்:

மனைவி: மங்கயற்கரசி,
பிள்ளைகள்: சந்தானகோபால், கந்ததாசன், கௌரி, நளினி, சுமதி, மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள்.

வள்ளியம்மன் கோவிலடி,
சுழிபுரம் கிழக்கு, சுழிபுரம். (15751)

---

## ★ விவாக சுபமுகூர்த்த அழைப்பிதழ் ★

நிகழும் மங்களகரமான பிரமோதூத வருடம் தை மாதம் 24 ஆம் திகதி (6-2-91) புதன்கிழமை காலை 8-46 மணிமுதல் 9-55 மணிவரையுள்ள சப்தமி திதியும் சுவாதி நட்சத்திரமும் குருவான ஓரையும் மீன லக்னமும் சித்தயோகமும் கூடிய சுபமுகூர்த்தத்தில்,

தெல்லிப்பழை
பிரமஸ்ரீ T. K. கிருஷ்ணமூர்த்திக் குருக்கள் அவர்களின் கனிஷ்ட குமாரன்
சிரஞ்சீவி
**நந்தகுமார் (கண்ணன்)**
அவர்கட்கு

கந்தரோடை
பிரமஸ்ரீ S. கார்த்திகேயஐயர் அவர்களின் கனிஷ்ட குமாரி
சௌபாக்கியவதி
**ஜெயந்தி (ஜெயா)**
அவர்களை

கன்னிகாதான பாணிக்கிரகண திருமாங்கல்யதாரணஞ் செய்யப் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு மேற்படி முகூர்த்தம் மணமகன் இல்லத்தில் நடைபெறவிருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதராய் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

★ வதுவரகிரகப்பிரவேசம் அன்று மாலை நடைபெறும் ★

இங்ஙனம்;

பிரம்மஸ்ரீ T.K. கிருஷ்ணமூர்த்திக்குருக்களும், பாரியாரும், தெல்லிப்பழை.

திருமதி சி.க. கார்த்திகேயஐயர், கந்தரோடை.

தங்கள் நல்வரவை விரும்பும்:

கி. கணேசமூர்த்தி-உமா தம்பதிகள்,
கி. பாலச்சந்திரா-ஜெகதா தம்பதிகள், B.Com. (Hons),
இ. சந்திரன்-ஜானகி தம்பதிகள்,
தி. சோமசேகர-ஜமுனா தம்பதிகள்.

சோ. வாமதேவசர்மா-ராஜி தம்பதிகள்,
சா. கோபாலசர்மா-பவானி தம்பதிகள்,
இ. விஸ்வேஸ்வரசர்மா-பர்வதாம்பிகை தம்பதிகள்.

[15756]

---

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 202/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 05 - 02 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org